ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட சமூகம்

# மொபைல் இணைய திறன் பயிற்சிக் குறிப்பு

அடிப்படை மொபைல் இணைய திறன்கள்
தொடர்பில் மக்களுக்கான பயிற்சி வழிகாட்டி



Copyright © 2017 GSM Association


# தொகுதி 8 – மொபைல் மணி (Mobile Money)

# Bitesize Training


## அது என்ன?

மொபைல் பண சேவை கொண்ட அடிப்படை மட்ட ∴போன் ஒன்றை காட்டுங்கள். அதன் பிரதான பணிகள் விளங்கும் வகையில், மெனுவை திறந்து வையுங்கள்.

## உங்களுக்கு தேவையானவை



மொபைல் ∴போன்




மொபைல் மணி போஸ்டர்ஸ்

## அதனை எதற்கு பயன்படுத்துவது?

**விளக்கப்படுத்துங்கள்:**

"மொபைல் மணி கணக்கொன்று இருப்பது, உங்கள் ∴போனில் பணப் பை இருப்பதற்கு சமம். வங்கி கணக்கின்றியும் மொபைல் மணியுடன், உங்கள் ∴போன் ஊடாக வேறு நபர்களிடமிருந்து பணம் பெற, அனுப்ப முடியும். கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும். உங்கள் மொபைல் சேவை வழங்குனருக்கு அமைய, பில் கொடுப்பனவு செலுத்த, பணம் சேமிக்க அல்லது கடன் பெற என அநேகவற்றை உங்களால் செய்ய முடியும்."

பயிற்சியாளர் மொபைல் மணி ஊடாக கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக தனது தனிப்பட்ட அனுபவங்களை விளக்க வேண்டும்.


பயிற்சி பெறுனரின் வாழ்க்கைக்கு அது எவ்வகையில் பயன்படுகின்றது என்பது தொடர்பில் கலந்துரையாடுங்கள்.

## அது எவ்வாறு செயற்படுகின்றது?

∴.போன் இனை பயிலுனரின் கைக்கு வழங்கி (பயிலுனரின் தொலைபேசியில்), இந்த படிமுறைகளுக்கு செல்ல உதவுங்கள்.

**விளக்கப்படுத்துங்கள்** : போஸ்டரிலுள்ள படிமுறைகளை பின்பற்றி, பயிற்சி பெறுனருக்கு நண்பர் ஒருவருக்கு பணம் அனுப்பும் முறையை காண்பியுங்கள்.

**குறிப்பு:** பயிற்சியின் ஆரம்பத்தின்போது, ஏற்கனவே மொபைல் மணி கணக்கு வைத்திருப்பவர்கள் யார் என்பதை பாருங்கள். மொபைல் மணி கணக்கு இல்லாத பயிற்று பெறுநர்கள் இருப்பின், பதிவுசெய்யும் படிமுறைக்கு அவர்களை கொண்டு செல்லுங்கள். (மேலதிக விபரங்களுக்கு "விரிவாக விளக்கப்படுத்தப்பட்டுள்ள பகுதியை" பாருங்கள்)




**"உங்கள் ∴.போனில் நண்பருக்கு பணம் அனுப்பும்" போஸ்டரை காண்பியுங்கள்**

**விளக்கப்படுத்துங்கள்:** "உங்கள் தொலைபேசியை பயன்படுத்தி, நண்பருக்கு பணம் அனுப்புவது எவ்வாறு என நான் உங்களுக்கு கற்றுத் தருகின்றேன்."

**கேளுங்கள்:** " உங்களது கணக்கிலிருந்து பணம் அனுப்ப வேண்டுமெனின், இதனை செய்யலாம். உங்கள் மொபைல் மணி கணக்கில் பணம் இல்லாவிடின் அல்லது இந்நேரத்தில் பணம் அனுப்ப தேவையில்லாவிடின், அதனை செய்யும் வழிமுறையை நான் காண்பிக்கின்றேன். எதிர்காலத்தில் உங்களுக்கு தேவைப்படின் அதனை செய்யும் முறை உங்களுக்கு தெரியும்"

# அது எவ்வாறு செயற்படுகின்றது?

- உங்கள் மொபைல் வலையமைப்பிற்கு, அவர்களது மொபைல் மணி சேவைக்கு குறுகிய இலக்கம் இருக்கும், அது சாதாரணமாக *123# போன்ற இலக்கமாகும். அதனை டைப் செய்து 'call' பொத்தானை அழுத்தவும்.
- உங்களுக்கு திரையில் மாற்று பட்டியலொன்று தென்படும் (உதா: 1,2,3,4,5...). நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டியது. பண 'transfer' / 'send' மாற்றினையே. இது சாதாணரமாக, இலக்கம் 1 (மேலேயுள்ள) ஆகும். உங்கள் ∴போன் கீபோட்டிலுள்ள இலக்கம் 1 ஐ அழுத்தி, அதன்பின்னர் 'select / ok' பொத்தானை அழுத்தவும்.
- நீங்கள் பணம் அனுப்பும் நண்பரின் அல்லது குடும்ப உறுப்பினரின் இலக்கத்தை டைப் செய்யுங்கள். பின்னர் 'select / ok' செய்யுங்கள்.
- நீங்கள் அனுப்பப்போகும் பணத்தின் பெறுமதியை டைப் செய்யுங்கள். (உதா: 100). பின்னர் 'select / ok' அழுத்தவும்.
- உங்கள் இரகசிய இலக்கத்தை (PIN) உட்புகுத்துங்கள். இது உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் உங்களுக்கு மட்டும் தெரிந்த இலக்கமாகும். இதனூடாக உங்கள் கணக்கு பாதுகாக்கப்படும். மற்றவரால் ஊகிக்க முடியாத தனிப்பட்ட இரகசிய இலக்கமொன்றை தேர்வு செய்யுங்கள். அடுத்து 'select / ok' அழுத்தவும்.
- கடைசியாக இலக்கம் 1 ஐ அழுத்தி "நீங்கள் பணம் அனுப்பு வேண்டியது அவசியம் என்பதை உறுதிப்படுத்துங்கள்". அடுத்து 'select / ok' அழுத்தவும். வாழ்த்துகள்! உங்கள் நண்பர் அல்லது குடும்ப உறுப்பினருக்கு பணம் அனுப்பப்பட்டுள்ளது.

**குறிப்பு:** பயிற்சிபெறுனர் உண்மையில் பணம் அனுப்ப விரும்பாவிடின், பணத்தை உண்மையில் அனுப்பாமல், பணத்தை அனுப்பும் முறையை கற்றுக்கொடுங்கள்.

## பயிற்சி


**"மொபைல் பயன்படுத்தி மொபைல் மணி அனுப்பும் முறையை பார்த்தோம். நீங்கள் யாருக்கு காசு அனுப்ப முடியும்?"**

**பயிற்றுனர்:** பயிலுனவர்களுக்கு அவர்களது நண்பர்கள் அல்லது குடும்பத்தினருக்கு பணம் அனுப்பும் முறையை பயில இடமளியுங்கள். பயிலுனர்களுக்கு தேவைப்படின், அவர்களுக்கு உதவுங்கள்.


**குறிப்பு:** உங்கள் தனிப்பட்ட இரகசிய இலக்கம் (PIN number) உங்களுக்கு மட்டும் விசேடமானது. எவருக்கும் காண்பிக்காதீர்கள். உங்கள் கணக்கிற்கு அதனூடாக பிரவேசிப்பதால், பாதுகாப்பாக வைத்திருங்கள். மொபைல் மணி முகவர், வாடிக்கையாளர் சேவை ஊழியர்கள், வேறு எவருக்கும் - தனிப்பட்ட ரீதியிலோ, SMS அல்லது இன்டர்நெட் ஊடாகவோ வழங்க வேண்டாம்.

# போஸ்டர், கட்அவுட் மற்றும் தகவல் பிரதிகள்


# உங்கள் ஃபோன் ஊடாக நண்பருக்கு பணம் அனுப்புதல்




# உங்கள் ஃபோன் ஊடாக பில் செலுத்துதல்




# மொபைல் மணி என்றால் என்ன?



அது, உங்கள்
ஃபோனிற்கான
பணப் பை போன்றது.



உங்கள் மொபைல் மணி முகவர்
ஊடாக, உங்கள் மொபைல் மணி
கணக்கிற்கு பணம் வைப்பிலிட
அல்லது பணம் மீளப் பெற முடியும்.




நீங்கள் மற்றவர்களுக்கு பணம்
அனுப்ப, பில் கொடுப்பனவு செய்ய
அல்லது கொள்வனவு செய்த
பொருட்களுக்கு கட்டணம்
செலுத்தலாம்.




உங்கள் PIN
இலக்கத்தை பயன்படுத்தி
கணக்குகளை
முன்னெடுக்கலாம்.

# மொபைல் மணி கணக்கு பதிவு செய்வதற்கு




உங்கள் மொபைல் சேவை நிறுவனத்திலிருந்து நீங்கள் SIM பெற்றிருத்தல் வேண்டும். உங்கள் பண முகவர் மொபைல் மணிக்காக உங்களை பதிவுசெய்வார்.



மொபைல் மணி இற்காக பதிவு செய்வதற்கு உங்களுக்கு அடையாள அட்டை சான்று அவசியமாகும்.



கணக்கிலிருந்து பணம் மீளப் பெற அல்லது வைப்புச் செய்யும் ஒவ்வொரு தடவையும் உங்கள் முகவரிடம் செல்லுங்கள்.



இந்த படிமுறைகளை முழுமைப்படுத்திய பின்னர், உங்கள் மொபைல் மணி சேவையை பயன்படுத்தலாம்.

# மொபைல் மணி ஊடாக நீங்கள் என்ன செய்யலாம்?

நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு பணம் அனுப்புதல்

நண்பர்கள் மற்றும் குடும்பத்தவரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ள

பில் அல்லது பாடசாலை கட்டணங்களை செலுத்த

உங்களுக்கு, மற்றவர்களுக்கு வானலை நேரம் (Air Time) பெற்றுக்கொள்ள


வெளிநாட்டிலுள்ள நண்பர்கள், குடும்பத்தவரிடமிருந்து பணம் பெற மற்றும் பணம் அனுப்ப

கொள்வனவு செய்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு கொடுப்பனவு செலுத்த

உங்கள் சேமிப்புகளுக்கு வட்டி பெற

கடன் பெற


# மொபைல் பயன்படுத்தும்போது பாதுகாப்பாக இருத்தல்



செய்தி



இரகசிய இலக்கம்
(PIN)




ஃபோன்




முகவர்கள்

# மொபைல் மணி தொடர்பாக அறிய வேண்டிய 5 விடயங்கள்


→ கணக்கு பதிவு செய்தல்


→ மொபைல் மணி கணக்கு


→ மொபைல் மணி முகவர்


→ மொபைல் இலக்கம்


→ இரகசிய இலக்கம் (PIN)

# மொபைல் மணி தொடர்பாக அறிந்துகொள்ள வேண்டிய 5 பிரதான விடயங்கள்

**கணக்கு பதிவு செய்தல்**

மொபைல் மணி பாவனை செய்ய, உங்கள் மொபைல் மணி முகவருடன் பதிவு செய்ய வேண்டும். அந்த முகவர் - மொபைல் மணி கணக்கை திறக்க உங்களுக்கு உதவுவார். இதற்காக உங்களுக்கு SIM அட்டை மற்றும் அடையாள அட்டை தேவை (தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது வாக்காளர் அட்டை) இருப்பது அவசியம்.

**மொபைல் மணி கணக்கு**

மொபைல் மணி கணக்கு, உங்கள் ∴போனில் பணப் பை இருப்பதற்கு சமம். மொபைல் மணியுடன் உங்களுக்கு, வங்கி கணக்கின்றியும் பல்வேறு தரப்பினரிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ள அல்லது அனுப்ப முடியும். அத்துடன் ∴போன் ஊடாக கொடுப்பனவுகளை செலுத்தவும் முடியும்.

**மொபைல் மணி முகவர்**


உங்கள் கணக்கிலிருந்து பணம் எடுக்கும், வைப்பிலிடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் மொபைல் மணி முகவரிடம் நீங்கள் செல்ல வேண்டும். உங்கள் கணக்கில் ஏதாவது பிரச்சினையிருந்தாலும் அவர்கள் உங்களுக்கு உதவுவர்.

**மொபைல் இலக்கம்**

மொபைல் ∴போன் இலக்கம் – நீங்கள் அழைப்பு எடுக்கவும் SMS அனுப்பவும் பயன்படுத்தும் இலக்கம் மொபைல் மணிக்கு முக்கியமாகும். நீங்கள் மொபைல் மணி பயன்படுத்தும் இன்னொருவருக்கு பணம் அனுப்ப அவர்கள் பயன்படுத்தும் மொபைல் இலக்கத்திற்கு அனுப்ப வேண்டும். வேறு நபர்கள் உங்களுக்கு பணம் அனுப்ப வேண்டுமாயின், அவர்கள் உங்கள் மொபைல் இலக்கத்திற்கே அனுப்ப வேண்டும்.

**இரகசிய இலக்கம் (PIN)**

நீங்கள் உங்களது மொபைல் மணி இலக்கத்தை பாதுகாக்க உதவும் உங்கள் தனிப்பட்ட இலக்கம் இதுவாகும். மொபைல் மணி பயன்படுத்தும்போது, இந்த இலக்கத்தை ∴போனில் டைப் செய்ய வேண்டும். அது மற்றவர்களை சென்றடையாதவாறு பாதுகாக்கவும். எக்காரணம் கொண்டும் எவருக்கும் கொடுக்காதீர்கள்.



# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்



# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்